**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C C. No: 39/2021**

**Dated: 26.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திருமதி.ஹேமலதா** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1,2 எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரணை செய்யப்பட்டார்)

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.02.2021-ம் தேதி சிவகங்கை NIB CID காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 16.00 மணிக்கு தகவலாளி நேரில் வந்து ஆஜராகி கொடுத்த தகவலை பெற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த ராமன் மகன் வேல்முருகன் என்பவர் கொடுத்த காரைக்குடி முனியஸ்வரன் கோவில் அருகே கஞ்சா விற்பனை செய்ததாக கொடுத்த தகவலை நான் பெற்று எழுத்து பூர்வமாக பதிவு செய்து எனது உடனடி மேல் அதிகாரிக்கு தகவலை தெரிவித்தேன். நான் பதிவு செய்த **தகவல் அதசாஆ.7** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அதன் பேரில் தலைமை காவலர் சகுந்தலா, முத்துகுமார், முத்தரசன் ஆகியோருடன் வழக்கிற்கு தேவையான உபகரங்ணகளை எடுத்துக் கொடுத்து 16.30 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு 18.30 மணிக்கு காரைக்குடி முனியஸ்வரன் கோவில் சந்து அருகே சென்று கண்காணித்தபோது 19.00 மணிக்கு TN 63 B 6960 என்ற பதிவெண் கொண்ட கோண்டா பேசன் பிளஸ் என்ற இருசக்கர வாகனம் தகவலாளி அடையாளம் காட்டி செல்ல அவரை நாங்கள் நிறுத்தி விசாரிக்க தனது பெயர் வேல்முருகன் த/பெ.ராமன் என்று தெரிவித்தார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு கஞ்சா விற்பதாக தகவல் வந்துள்ளது என்றும் அதனால் தங்களையும் தங்களது உடைமைகளையும் சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய கேட்க தங்களுக்கு உரிமையுள்ளது என்று கேட்டதற்கு வேறு எங்கும் என்னை அழைத்து செல்ல வேண்டாம் என்றும் காவல் ஆய்வாளர் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறி சோதனை சம்மத கடிதத்தில் 19.30 மணிக்கு நான் தயார் செய்த சோதனை சம்மத கடிதம் 1-வது எதிரி கையொப்பம் செய்தார். அவருக்கு சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டது. அதில் சாட்சிகளாக சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். அவர் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் டேங்க் கவரில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தபோது அதில் கஞ்சா, இலை, பூ, காம்பு உடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க அதன் எடை 1.500 கிகி இருந்தது. 20.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் முன்னிலையில் கஞ்சா, இருசக்கர வாகனத்தை

கைப்பற்றினேன். மேற்படி பகுப்பாய்விற்காக கைப்பற்றப்பட்ட கஞ்சாவினை விற்று தலா 25 கிராம் விதம் இரண்டு மாதிரிகள் எடுத்து அதற்கு S1, S2 என்று பெயரிட்டு அதற்கு SHO சீல் வைத்தேன். மீதமுள்ள கஞ்சா 1.450 கிகி கஞ்சாவிற்கு NIB CID சீல் வைத்து P1 என்று குறியீடு செய்து விபரல் லேபில் ஒட்டி சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன். கஞ்சா விற்ற காரணம் கூறி எதிரி வேல்முருகன் என்பவருக்கு கைது அறிவிப்பு கொடுத்து கைது செய்தேன். அந்த கைது அறிவிப்பில் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள். எதிரி வேல்முருகன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை சாட்சிகள் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் 23.30 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.5/2023 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B), 25 NDPS Act-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1-வது எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 1-வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் 2-வது எதிரியும் சம்பந்தப்பட்டுள்ளதால் 2-வது எதிரியை நான் போலீஸ் பார்ட்டியுடன் சென்று கடந்த 17.02.2021-ம் தேதி இரவு 8.00 மணிக்கு சிவகங்கை, காரைக்குடி, முனியஸ்வரன் கோவில் சந்து அருகில் வைத்து 21.30 மணிக்கு கைது செய்தேன். பின்னர் 2-வது எதிரிக்கு எங்களை அடையாளம் சொல்லியும் அவரை 1-வது எதிரி குறித்து விசாரிக்க 2-வது எதிரி தானாக முன்வந்து 22.00 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.அதனை சாட்சிகள் முத்தரசன் மற்றும் சகுந்தா முன்னிலையில் பதிவு

செய்தேன். பின்னர் 2-வது எதிரிக்கு கைதுக்கான காரணம் கூறியும் கைது அறிவிப்பு கொடுத்தும் கைது செய்தேன். பின்னர் 2-வது எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்தும் நிலைய பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் நான் மேற்கொண்ட சோதனை குறித்து 17.02.2021-ம் தேதி எனது உடனடி மேல் அதிகாரியான காவல் துணை கண்காணிப்பாளர் NIB CID மதுரை பொறுப்பு அவர்களிடம் பிரிவு 57 NDPS Act-ன்படியான விரிவான அறிக்கையை சமர்ப்பித்தேன். அந்த **விரிவான அறிக்கை அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட தடய சொத்தினை படிவம் 95 ன் மூலமான நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதற்கான RP No.22/2021 ஆகும்.அதற்கான **படிவம் 95 அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற உத்தரவின்படி கைப்பற்றப்பட்ட தடய சொத்தின் மாதிரியை பகுப்பாய்வுக்கு என நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வு செய்ய ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும் ஆய்வு முடிந்த பின் பகுப்பாய்வு அறிக்கை பெற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான **பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் 1 முதல் 6 வரையுள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.07.2021 அன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 1-வது எதிரி வேல்முருகன் கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தி **கோண்டா பேசன் இருசக்கர வாகனம் சாபொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் அவர்கள் சான்றொப்பம் செய்த **புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs disposal Committee மூலம் அழிக்கப்பட்டது.

அதற்கான CRlmp No.4302/2024 Dt.09.08.2024 அதற்கான **CRlmp No.4302/2024 உத்தரவு நகல் அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் கஞ்சாவினை அழிப்பதற்கு முன்பாக எடுக்கப்பட்ட CS1 **Sample ganja சாபொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் சரிதான். முன் தகவல் அதசாஆ.7ஐ உயர் அதிகாரி பெற்று கொண்டதற்கான குறிப்பு எதுவும் அதில் இல்லை என்றால் சரிதான். உயர் அதிகாரிக்கு எந்த போனிலிருந்து எந்த போனிற்கு எத்தனை மணிக்கு தகவல் சொல்லப்பட்டதாக குறிப்பு முன் தகவலில் இல்லை என்றால் சரிதான். எனக்கு தகவல் வந்ததாக சொல்வதும் பொய் என்றும் உயர் அதிகாரிக்கு தெரிவித்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. முன் தகவல், சோதனை சம்மத கடிதம், கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், கைது அறிக்கை ஆகிய அனைத்து ஆவணங்களையும் யார் எழுதியது என்றால் அது தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் அனைத்து ஆவணங்களும் என்னால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ரைடுக்கு எந்தவாகனத்தில் சென்றேன் என்பதை ஆவணங்களில் குறிப்பிடவில்லைஎ ன்றால் சரிதான். முனியஸ்வரன் கோவில் சந்து என்பது ஜனநடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான்.இந்த வழக்கில் தனிநபர்கள் இருந்ததாக எந்த ஆவணங்களிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பந்தமாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். முனியஸ்வரன் கோவில் சந்து என்பது ஒரு நிளமாக பகுதி என்றால் சரிதான். எதிரிகளை குறிப்பிட்டு

எந்த இடத்தில் பிடித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது வீடுகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். வழக்கில் பிரிவு 57 -ன்படியான அறிக்கையை நான் குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரிவு 57 -ன்படியான அறிக்கையை 1, 2-வது எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரிவு 57 -ன்படியான அறிக்கையை நான் உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் பிரிவு 57 -ன்படியான அறிக்கையை உடன் தாக்கல் செய்தததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சான்று பொருட்கள் 10.03.2021-ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தகவல் வந்ததாகவும் அதன் பேரில் சாட்சிகளுடன் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் 1-வது எதிரியை பிடித்தாகவும் அவரிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றும் 1-வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் சொன்னல் சரியல்ல. 1-வது எதிரிக்கும் 2-வது எதிரிக்கு ஒப்புதல் வாக்குமூலம் தவிர தொடர்பு குறித்து வேறு எந்த ஆவணங்களோ சாட்சிகளோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2-வது எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் 2-வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளை விசாரணை என்ற பேரில் அழைத்து சென்று காவ்ல் நிலையத்தில்வைத்து வேறு

நபர்களால் தயாரிக்கப்பட்டு வைத்திருந்த ஆவணங்களில் மேஜை வேலையாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மையை மறைத்து சாட்சிமளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. இந்த வழக்கு உண்மை வழக்கு இல்லை என்றும் அதனால் தான் நான் புகார்தாரராக இருந்து புலன் விசாரணை செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் போதை பொருள் சட்ட விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1, 2 எதிரிகளுக்கும் அவர்களுக்குள் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.